2. தொழுவம் தழுவும் பாலனே (தியானப்பாடல்)
பாடல்: கிறிஸ்து ராஜன்
இசை: நிஷா
பாடியவர்: பிலோமினா
இசை இயக்கம்: Fr.டெனிஸ் வாய்ஸ்

தொழுவம் தழுவும் பாலனே
தழுவும் கரங்கள் புல்லனையோ.
மகிழும் தருணம் மாபரனே
நிகழ்வும் கடவுள் சொற்படியே
தாய்மரி தாலாட்டில் தாங்கிடும் பாலகனே
ஆராரோ ஆனந்தம்
ஆரிரோ பேரின்பம்

1. காரிருள் நீக்கிடும் பேரொளியே
   காத்திட தோன்றிய பேரருளே
   சாத்திரம் கூறிடும் ஞானியரும்
   பார்த்திட கூடினர் பாதத்திலே
   யார் எவர் என்றே தெரியவில்லை
   ஆவின மேய்ப்பர்கள் மகிழ்ந்தனரே
   ஏன் இது என்றே புரியவில்லை
   ஆயினும் மீட்பரை புகழ்ந்தனரே
   ஆரிராரோ ஆனந்தமே
   ஆராரிரோ பேரின்பமே

2. தூய்மையில் வாழ்ந்திடும் பேரழகே
   தூதர்கள் வாழ்த்திடும் பேரரசே
   மாற்றங்கள் பூமியில் தோன்றிடவே
   மாபரன் மானுட தோற்றத்திலே
   தான் எனும் எண்ணம் மறைந்தடவே
   தாழ்ச்சியை யாவரும் அடைந்திடவே
   ஓர் மனம் கொண்டே இணைந்திடவே
   மாட்சியின் தேவனோ புவியினிலே
   ஆரிராரோ ஆனந்தமே
   ஆராரிரோ பேரின்பமே